**தலைப்பு 251 – விலை மதிப்பீட்டுத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 251 – விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செலயகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்கு வழிகாட்டலின் பந்தி 7.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் படி, முற்பணக் கணக்குகளின் பெறுமதியில் வைப்புக் கணக்குகளின் பெறுமதியை கழித்து நிதி நிலைமை கூற்றில் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தின் கீழ் காணப்படும் ‘‘திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்’’ பெறுமதி கணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் முற்பணக் கணக்குப் பெறுமதி ஆகிய ரூபா 86,322,026 தொகையினால் வைப்புக் கணக்கின் பெறுமதியாகிய ரூபா 2,155,346 தொகை கழித்த பின்னர் வித்தியாசம் ரூபா 84,166,680 தொகையாக காணப்பட வேண்டியிருந்த போதிலும், அது | ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் சரியான பெறுமதி ரூபா 430,183,481 தொகையாக இருந்ததுடன், அது தவறுதலாக ஒதுக்கப் பெறுமதி காட்டும் போது எண்கள் மாற்றப்பட்டு காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இவ் வித்தியாசம் திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் என காட்டப்பட்டுள்ள பெறுமதி கணிக்கும் போது வித்தியாசப்படுவதினால் மொத்த பொறுப்புக்களின் பெறுமதி சரியாக காட்டப்படுகின்றது என கருணையுடன் தெரிவிக்கின்றேன். | அரச கணக்குப் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் படி செயற்பட வேண்டும். |

ரூபா 83,866,680 தொகை என காட்டப்பட்டிந்தமையால் "திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்" பெறுமதி ரூபா 300,000 இற்கான இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமானம் பெறுவனவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 நிதிக் கூற்றுக்களில் அடங்கிய நிலுவை வருமானக் கூற்றில் (ACA-1(i)) தகவல்களின் படி பதிவழிக்கப்பட்ட நிலுவை வருமானம் ரூபா 20,878,937 தொகையும் முன்னைய ஆண்டுகள் தொடர்பான நிலுவை அறவீடுகள் ரூபா 101,538,604 தொகையும் என காட்டப்பட்டிருந்த போதிலும் 2022 ஆண்டிற்கான நிலுவை வருமான கூற்றின் படி அது முறையே ரூபா 4,070,381 தொகை மற்றும் ரூபா 118,347,160 தொகை என அவதானிக்கப்பட்டது. | 2022 ஆண்டின் போது 2022.02.09 வருமானத் தலைப்பிற்கு உண்மையாக செலவு வைக்கப்பட்ட வருமானம் ரூபா 101,538,604 தொகையாக காணப்பட்டதுடன், அந்த எண்ணிக்கை ACA-1(i) படிவத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | சரியான மற்றும் நிச்சயிக்கப்பட்ட தரவுகளின் மூலம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

#### (ஆ) மீண்டுவரும் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆளுக்குரிய சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவு ரூபா 514,405,063 தொகை எனினும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 515,380,194 தொகை என மிகையாக காட்டப்பட்டிருந்தமையால் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 975,131 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்து என அவதானிக்கப்பட்டது. | மீண்டுவரும் செலவுகளுக்கு சீராக்கல் செய்ய வேண்டிய ஏனைய திணைக்களங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவு ஒன்று தவறுதலாக மூலதனச் செலவுக்கு சீராக்கல் செய்யப்பட்டமையால் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்ததுடன், காசுப் பாய்ச்சல் கூற்றில் செலவுகள் ஒட்டுமொத்தமாக கணிக்கும் போது இந்த வித்தியாசம் சீராக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**(இ) மூலதனச் செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் மூதலீட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் ''பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றுதல்'' என ரூபா 7,078,033 இற்கான காசு வெளிப் பாய்ச்சல் ஒன்று காட்டப்பட்டிருந்த போதிலும் நிலுவைச் சமம்பாட்டின் படி ரூபா 8,053,162 தொகையாகக் காட்டப்பட்டமையால் காசுப் பாய்ச்சல் கூற்றின் மூதலீட்டு வெளிப்பாய்ச்சல் ரூபா 975,129 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | மீண்டுவரும் செலவுகளுக்கு சீராக்கல் செய்ய வேண்டிய ஏனைய திணைக்களங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவு ஒன்று தவறுதலாக மூலதனச் செலவுக்கு சீராக்கல் செய்யப்பட்டமையால் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்ததுடன், காசுப் பாய்ச்சல் கூற்றில் செலவுகள் ஒட்டுமொத்தமாக கணிக்கும் போது இந்த வித்தியாசம் சீராக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**(ஈ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு கிடைத்திருந்த 2021 ஆண்டிற்குரிய ரூபா 822,362 தொகை மற்றும் 2022 ஆண்டிற்குரிய ரூபா 541,400 தொகை ஆக கூட்டுத்தொகை ரூபா 1,363,762 இற்கான விலை மதிப்பீட்டுக் கட்டணம் வருமானக் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைத்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | திணைக்கள வங்கிக் கணக்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் வைப்புச் செய்தவரை இனங்கண்டிருக்காத இவ் வைப்புக்கள் இனங்காணப்படாத பெறுவனவுகள் என பொது வைப்புக் கணக்கிற்கு 2022 ஆண்டின் போது உட்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த வைப்புக்கள் பலவின வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்தும் வைப்புச் செய்தவரை இனங்காண்பதற்காக முயற்சி செய்யப்படுவதுடன் பின்னைய சந்தர்ப்பங்களில் இனங்கண்ட போது அந்த வைப்புக்கள் மதிப்பீட்டு வருமானத் தலைப்பிற்கு செலவு வைப்பதற்கும் வைப்புச் செய்தவரை இனங்காண முடியாத | வருமானம் சரியாக இனங்கண்டு கணக்குப் பதிவு வேலைத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்த வேண்டும். |

வைப்புக்கள் பலவின வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**(உ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இயந்திர உபகரணக் கொள்வனவு ரூபா 3,226,345 தொகை எனினும் திறைச்சேரியின் கணினி அச்சுப் பிரதி SA 82 இன் படி இயந்திர உபகரணங்கள் கொள்வனவு ரூபா 3,045,283 தொகையாகும். ஆண்டின் போது கொடுப்பனவு செய்திருந்த 02 வாயுசீராக்கி இயந்திரங்களின் பெறுமதியாகிய ரூபா 181,062 தொகை மீளாய்வாண்டின் கொள்வனவு என கணக்கீடு செய்யாமல் ஆரம்ப மீதிக்கு சீராக்கல் மேற்கொள்ளல் வித்தியாசத்திற்கான காரணங்கள் என அவதானிக்கப்பட்டது. | இத் தொகை 2021 ஆண்டில் அரச வாணிப பலவின கூட்டுத்தாபனத்தில் இருந்து கொள்வனவு செய்து பொருத்தப்பட்ட இரண்டு வாயுசீராக்கி இயந்திரங்கள் பொருத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளாக இருந்தமையால் ஆரம்ப மீதிக்கு சீராக்கல் மேற்கொள்ளல் சரியானது. 2021 ஆண்டின் போது வழங்கி பொருத்தப்பட்டிருந்த செலவிற்கான போதிலும் பொருத்துவதற்கான உறுதிச்சீட்டு 2022.03.15 திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் கொடுப்பனவு 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இச் செலவு மூலதனப்படுத்த வேண்டியதுடன், முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்த சொத்துக்குரிய மூலதனச் செலவாக காணப்பட்டமையால் ஆரம்ப மீதிக்கு சீராக்கல் மேற்கொள்ள வேண்டிய இவ்வாறான மூலதனப்படுத்தலுக்காக சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் வழங்கியிருந்த வசதிகளைப் பயன்படுத்தி ஆரம்ப மீதியுடன் சீராக்கல் செய்யப்பட்டது. அதன் படி ரூபா 3,226,345 தொகைக்கான 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவு SA 82 அச்சுப் பிரதியில் புதிய கொள்வனவுகள் ரூபா 3,045,283 தொகை மற்றும் ஆரம்ப மீதிக்கு சீராக்கல் ரூபா 181,062 ஆக இரண்டு பகுதிகளாக | முறைப் பிரகாரம் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காட்டப்படுகின்றது. | |
| (ii) | நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 430,183,481 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும் அதே கூற்றில் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தின் கீழ் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண ஒதுக்கம் என ரூபா 430,483,481 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் வித்தியாசம் ரூபா 300,000 இற்கான இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் உண்மையான பெறுமதி ரூபா 430,183,481 தொகையாக காணப்பட்டதுடன், அது தவறுதலாக ஒதுக்க பெறுமதி காட்டும் போது இலக்கங்கள் மாறிக் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இவ் வித்தியாசம் திறைச்சேரிக்கு தேறிய சொத்துக்கள் என காட்டும் பெறுமதி கணிக்கும் போது ஏனைய பெறுமதிகளுடன் வித்தியாசப்படுவதினால் மொத்த பொறுப்புக்களின் பெறுமதி சரியாக காட்டப்படுகின்றது என கருணையுடன் தெரிவிக்கின்றேன். | சரியான எண்ணிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 85(1)(இ) இன் படி இயன்றளவு தத்வரூபமாக மற்றும் சரியாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு அரச வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் மதிப்பீட்டு வருமானம் ரூபா 83 மில்லியன் தொகை எனினும் உள்ளவாறான வருமானச் சேகரிப்பு ரூபா 133.1 மில்லியன் தொகையாக இருந்தமையால் உள்ளவாறான வருமானம் மற்றும் வருமான மதிப்பீட்டிற்கு இடையே 60 சதவீத பொருண்மையான முரண் ஒன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் அது 31 சதவீதமாக இருந்தது. | பொதுவான நிலைமையின் கீழ் எதிர்வுகூறக் கூடிய தகவல்களின் படி இயன்றளவு சரியாக தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்காத மற்றும் பாரிய பெறுமதியுடைய விலைமதிப்பீட்டு அலுவல்கள் மற்றும் கட்டணப் பெறுவனவுகள் காரணமாக இந்த மிகைத்தல் ஏற்படுகின்றது. உதாரணமாக 2022 ஆண்டு ஜூன் மாதமளவில் ரூபா 30,923,960 ஆக இருந்தது. அவ்வாறாயினும் ஜூலை மாதத்தில் கொழும்புத் துறைமுகத்தின் முடிவிடம் ஒன்று குத்தகைக்கு கொடுப்பதற்காக அவசரமாக மேற்கொள்ளப்பட்ட விலைமதிப்பீட்டு கருமத்துடன் தொடர்புடைய ரூபா 84,056,400 இற்கான விலைமதிப்பீட்டுக் | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட்டு சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டணம் கிடைத்தமையால் 2022 ஆண்டிற்கான இந்த மதிப்பீடு மிகைத்தல் நேரிட்டிருந்தது. | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றின் படி காட்டப்பட்டுள்ள இனங்காணப்படாத பெறுவனவுகள் 34 சந்தர்ப்பம் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 379,674 தொகை மற்றும் பொது வைப்புக் கணக்கின் படி கண்டறியப்பட்ட இனங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 1,363,762 தொகையுமாக மொத்தம் ரூபா 1,743,436 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டின் பொது வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாடுபூராகவும் பரந்திருக்கும் 19 விலைமதிப்பீட்டு அலுவலகங்கள் மூலம் திணைக்களத்தின் அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் தலைமை அலுவலகத்தில் மாத்திரம் வங்கிக் கணக்கு ஒன்று பேணப்பட்டு வருகின்றது. அதன் படி நாடுபூராகவும் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளை ஒன்றில் திணைக்கள வங்கிக் கணக்கிற்கு பணமாக அல்லது காசோலை மூலம் வைப்புச் செய்வதற்காக வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன் வைப்புக்குரிய ஆவணங்கள் தலைமை அலுவலகத்திற்கு கிடைத்த பின்னர் வங்கிக் கணக்குகளை பரிசோதனை செய்து வைப்புக்களுக்காக பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றது. அந்த ஆவணங்கள் தலைமை அலுவலகத்திற்கு தபால் மூலம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதினால் இந்த இனங்காணப்படாத பெறுவனவுகள் ஏற்படுவதுடன் இந்த நிலைமையை தவிர்ந்து கொள்வதற்காக 4 பிரதிகளைக் கொண்ட வைப்புப் பத்திரம் ஒன்று 2022 ஜனவரி மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் படி இந்த வருமானத்தை இனங்காண்பதில் ஏற்பட்டுள்ள தாமதமடையும் சிக்களை தீர்த்து கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது. | சரியாக வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்யும் செய்முறை ஒன்று அறிமுகப்படுத்த வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 719,500,478 இற்கான நிலுவை விலைமதிப்பீட்டு கட்டண வருமானம் ரூபா 583,464,653 தொகை எனப்படும் 81 சதவீதம் | நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக அடிக்கடி நினைவூட்டல் கடிதம் அனுப்பப்படுவதுடன் சட்டப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 01 வருடம் முதல் 14 வருடம் வரையான காலவீச்சில் நிலுவையாக காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | நினைவூட்டல் கடிதங்களுக்கும் போதியளவு இணக்கம் ஒன்று காட்டப்பட்டிருக்காத மீதிகளை அறவீடு செய்வதற்காக அமைச்சு மட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது கடந்த ஆண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 705,882,194 இற்கான நிலுவை வருமானத்தில் ரூபா 118,347,160 தொகை எனப்படும் 16.8 சதவீதம் மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டமையால் நிலுவை வருமான அறவீடு தொடர்பாக கணிசமான முன்னேற்றம் ஒன்று காணப்படவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | தொடர்ச்சியாக நினைவூட்டல்கள் மற்றும் பின்தொடர் நடவடிக்கை முறை மூலம் அனைத்து நிலுவைக் கடன்களையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானம் தாதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமான கூற்றின் படி எட்டு நிறுவனங்களில் இருந்து நீண்டகாலமாக அறவிடப்படாமல் காணப்படும் நிலுவை வருமானம் ரூபா 651,335,659 தொகை அதாவது மொத்த நிலுவை வருமானத்தில் 90% என அவதானிக்கப்பட்டது. | இவற்றில் எஸ.டப்ளியூ.ஆர்.டீ பண்டார நாயக்க மன்றத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பான அலுவல்கள் நிதியமைச்சின் சட்ட பிரிவின் மூலம் நடாத்தப்பட்டு வருவதுடன் அரச நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாமல் இருப்பதினால் இந்த நிலுவைத் தொகையை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கும் படி இந்த நிறுவனங்களுக்குரிய அமைச்சிற்கு சட்டப் பிரிவின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் தாதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் குறிப்பு இலக்கம் 06 இன் படி கட்டண விடுவிப்பு விடுதலை நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 664,839 தொகை நிலுவை வருமானம் என காட்டப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த குழுவினால் 233 கோப்புக்கள் பரிசோதனை மேற்கொண்டு அதன் பரிந்துரை சமர்ப்பித்திருந்ததுடன் மேலும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மாகாண அலுவலகங்களினால் கட்டணம் அழைக்கப்பட்ட பின்னர் | முறையான விசாரணை ஒன்றின் பின்னர் தீர்க்கும் செயற்பாடு எடுப்பதற்கும் இவ்வாறான நிலைமைகளை தவிர்ந்து கொள்வதற்கான வேலைத் திட்டம் ஒன்று ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வாணிபமல்லாத நிறுவனங்கள் என இனங்கண்டு நிலுவை வருமானம் கணக்கில் இருந்து அகற்றும் படி அறிவிக்கப்பட்டுள்ள மீதிகளும் உட்படுத்தப்பட்டு ரூபா 3,059,905.20 தொகை பெறுமதியான 20 மீதிகள் நிலுவை வருமானக் கணக்கில் இருந்து அகற்றுவதற்காக அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஆலோசனையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (எ) | கட்டணங்கள் அறவீடு செய்வதற்கான திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 2020/02 இன் படி வாணிப அல்லது வாணிபம் அல்லாத நிறுவனங்கள் என இரண்டு அட்டவணைகள் காணப்பட்டதுடன் விலைமதிப்பீட்டுக் கட்டணம் அழைப்பதற்கு வாணிப நிறுவனங்களில் இருந்து மாத்திரம் இயலுமாக இருந்தது. மீளாய்வாண்டிற்கான 06 நிறுவனங்கள் அந்த இரண்டு அட்டவணைகளிலும் குறிப்பிடப்படாத நிறுவனங்கள் என அவதானிக்கப்பட்டதுடன் வாணிப மற்றும் வாணிபமல்லாத நிறுவனங்களை இனங்கண்டு பெற வேண்டிய விலைமதிப்பீட்டு வருமானம் சரியாக கணக்கீடு செய்யக் கூடிய விதமாக உள்ளக் கட்டுப்பாட்டு முறைமையொன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்படவில்லை. | வாணிப அல்லது வாணிபமல்லாத நிறுவனங்களின் அட்டவணை திறைசேரியின் அரச தொழில்முயற்சித் திணைக்களத்தினால் அடிக்கடி நாளதுவரை ஆக்கப்படுவதுடன், விலைமதிப்பீட்டுக கட்டணம் அழைப்பதற்கு வாணிப நிறுவனங்களில் இருந்து மாத்திரமே இயலுமாக இருந்தது. இந்த அட்டவணைக்கு இடையிடையே நிறுவனங்கள் சேர்தல் மற்றும் விலகல் மேற்கொள்ளப்படுவதுடன் இது தொடர்பாக அறியாமை மற்றும் கவனம் செலுத்தாமை காரணமாக மாகாண அலுவலகங்களில் இருந்து கட்டணங்கள் அழைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் பின்னர் இனங்காணப்பட்ட போது தேவையான சரிசெய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. கணக்காய்வு அவதானிப்பின் படி வாணிப மற்றும் வாணிபமல்லாத நிறுவனங்களின் அட்டவணைகள் மற்றும் அவற்றிற்கு அடிக்கடி மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி தொடர்ந்தும் காணப்படும் சிக்கல்கள் தலைமை அலுவலகத்தில் அறிவுரைகளை பெற்று தீர்த்துக் கொள்ளும்படி மாகாண அலுவலகங்களுக்கு அறிவித்துவதற்காக குறித்துக் கொண்டேன். | நிறுவனங்களின் அட்டவணை காலரீதியாக நாளதுவரை ஆக்கப்பட்டு கட்டண அறவீடுகள் முறைப்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்று ஈடுபடுத்தப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா.** | **இணங்காமைகள்** | | |
| 2015 திசெம்பர் 23 திகதிய இலக்கம் 2015/019 கொண்ட திணைக்கள சுற்றறிக்கை | | நிதிசார் விலைமதிப்பீட்டு அலுவல்களுக்காக முற்பணம் பெற்றுக் கொள்ளும் போது அனுமானிக்கப்பட்ட வர்த்தக பெறுமதியில் நூற்றிக்கு 0.5 அல்லது ரூபா 10,000 தொகை ஆகிய இரண்டு பெறுமதிகளிலும் குறைந்த பெறுமதியை முற்பணம் என பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் வாடகை விலைமதிப்பீட்டிற்காக முற்பணம் அறவீடு செய்யும் போது அனுமானித்த வாடகை பெறுமதியில் 0.5 சதவீதம் அல்லது ரூபா 5,000 தொகை ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதி அறவிடப்பட வேண்டும். இந்த முற்பணங்களை பெற்றுக் கொள்ளும் போது அனுமானிக்கப்பட்ட விலை மதிப்பீட்டுப் பெறுமதி தொடர்பாக சேவை நாடுனருக்கு அறிவிக்காமையால் உண்மையான விலை மதிப்பீட்டுப் பெறுமதியை சமர்ப்பிக்கும் போது முற்பணம் மற்றும் உண்மையான விலைமதிப்பீட்டுக் கட்டணத்திற்கு இடையே பாரிய முரண் ஒன்று காணப்பட்டமையால் குறிப்பிட்ட சேவை நாடுனரினால் கொடுப்பனவு செலுத்தாமல் இருப்பதற்கு | விலைமதிப்பீட்டுக் கட்டணம் அறவீடு செய்யும் செய்முறையில் காணப்படுகின்றது என இனங்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக இந்த செய்முறை மற்றும் தொடர்புடைய திறைச்சேரியின் பல்வேறு திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் நியமனம் செய்யப்பட்ட குழுவொன்றின் பரிந்துரை மீது புதிய செய்முறை ஒன்று கடைபிடிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்திருந்தது. எதிர்காலத்தில் குறிப்பிட்ட சுற்றறிக்கை அரச நிதி திணைக்களத்தினால் வெளியிட்ட பின்னர் புதிய செய்முறையின் படி வருமானம் கணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | விலைமதிப்பீட்டுக் கட்டணம் அறவீடு செய்யும் செய்முறை முறைப்படுத்தப் பட வேண்டும். |

சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டிற்குரிய சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயலாற்றுகை அறிக்கையின் படி 2022 ஆண்டின் போது விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு பூர்த்தி செய்ய முடியாமல் காணப்பட்ட பொது விலைமதிப்பீடுகள் மற்றும் வீதவரி விலைமதிப்பீட்டு கோப்புக்கள் முறையே 11,867 தொகை மற்றும் ரூபா 8,793 தொகை காணப்படுகின்து என அவதானிக்கப்பட்டது. | விலைமதிப்பீட்டு அலுவல்களுக்காக வெளிக்களத்தில் கடமையாற்றும் உதவி விலைமதிப்பீட்டாளர், விலை மதிப்பீட்டாளர் மற்றும் சிரேஷ்ட விலைமதிப்பீட்டாளர் ஆகிய பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிட எண்ணிக்கை 451 ஆகும். அது அந்தப் பதவிகளில் இருக்க வேண்டிய ஒட்டுமொத்த பதவியணி ஆகிய 760 உடன் இணக்கஞ் செய்த போது 59% சதவீதமாகும். உண்மையாகவே சேவையில் ஈடுபட வேண்டிய வெளிக்கள உத்தியோகத்தர் நிலுவையாக காணப்படுவதுடன், 2022 ஆண்டின் அரையாண்டு வரை காணப்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வெளிக்கள கடமைகள் வரையறுக்கப்பட்டமையால் பூர்த்தி செய்யப்படாமல் கோவைகள் காணப்படுவதுடன் அரசாங்கத்தினால் ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டிருந்த போது பாரிய முயற்சி ஒன்றின் பிரதிபலனாக 2023 ஏப்ரல் மாதம் முதல் உதவி விலைமதிப்பீட்டாளர்கள் 145 பேர் சேர்க்கப்பட்டமையால் இந்த எண்ணிக்கையை கணிசமான அளவு குறைத்துக் கொள்வதற்கு முடியுமாகும். | விலைமதிப்பீட்டு அலுவல்கள் தாமதம் இன்றி மேற்கொள்வதற்கு தேவையான செய்முறை ஒன்று அறிமுகப்படுத்தல் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் வலுப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2022 திசெம்பர் 31 திகதியளவில் சட்டப் பிரிவிற்கு கிடைத்திருந்த 836 மேன்முறையீடுகள் 276 மாத்திரம் விசாரிக்கப்பட்டுள்ளது எனவும் அவை கிடைத்த மொத்த மேன்முறையீட்டு எண்ணிக்கையில் 33 சதவீதமாக காணப்பட்டதுடன் கருமங்கள் பூர்த்தி செய்யப்படாத மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 560 எனப்படும் 67 சதவீதமாகும். | குறிப்பிட்ட வழக்குகளுக்கு தோற்றுதல், காரணங்களை விளக்குதள், சட்டமா அதிபரின் ஆலோசனை பெறல், சட்டமா அதிபரின் உதவி பெற்றுக் கொள்ளல் மற்றும் காணிகளை தனதாக்கல் மீளாய்வு சபையின் வழக்கு விடயங்களின் போது தனதாக்கல் உத்தியோகத்தர்கள்/ பிரதேச செயலாளர்கள் சார்பாக தோற்றுதல் மற்றும் அதனோடு தொடர்புடைய கருமங்கள் மாத்திரம் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>அந்த வழக்கு அலுவல்கள் தொடர்பாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் சட்டப் பிரிவினால் எடுக்க வேண்டிய அனைத்து கட்ட நடவடிக்கைகளும் வினைத் திறனுடன் கடைபிடித்துள்ளதுடன் பல்வேறுபட்ட விடயங்கள் மீது பூர்த்தி செய்யப்பட்டிருக்காத வழக்கு அலுவல்கள் தொடர்பாக சட்டப் பிரிவின் கட்டுப்பாட்டிற்கு புறம்பாக நடைபெறும் கருமம் ஒன்றாக காணப்படுவதுடன் சட்டப் பிரிவின் நேரடிப் பங்களிப்பு மேற்கொள்ளக் கூடிய தேவையான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டது எனவும் கருணையுடன் தெரிவிக்கின்றேன். | தாமதங்களை குறைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 485 பதவிகள் எனப்படும் 43 சதவீதம் வெற்றிடமாக காணப்படுகின்றது எனவும், வெற்றிடங்களில் 331 தொகை எனப்படும் 68 சதவீதம் மூன்றாம் மட்டத்தில் விலை மதிப்பீட்டு அலுவல்கள் நிறைவேற்றும் | அங்கீகரிக்கப்பட்ட சேவை யாப்புக்கு இணங்க ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றதுடன்,<br>• விலை மதிப்பீட்டாளர் பதவிகளுக்காக 62 உத்தியோகத்தர்கள் சேவை அனுபவம் மற்றும் திறமை மீது ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முறைப் பிரகாரம் செயற்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் என அவதானிக்கப்பட்டது. | • விலை மதிப்பீட்டாளர் பதவிக்காக வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு உரிய பரீட்சை அறிவித்தல், 2023.04.21 திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது.<br>• வெளிக்கள / அலுவலகம் சார் உத்தியோகத்தர்கள் 2 தொகுதி உத்தியோகத்தர்கள் வகுப்பு II தரம் II உதவி விலை மதிப்பீட்டாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சை மூலம் 2023.04.24 திகதி உதவி விலை மதிப்பீட்டாளர் 145 பேர்களுக்காக நியமனம் வழங்கப்பட்டிருந்ததென கருணையுடன் தெரிவிக்கின்றேன். | |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியளவில் இரண்டாம் மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட 97 பேர் மிகையாக காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் 2020 இன் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தனர். இந்த உத்தியோகத்தர்களில் 2023.04.24 திகதி திணைக்களத்தில் உதவி விலைமதிப்பீட்டாளர் என ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் தவிர ஏனைய உத்தியோகத்தர்கள் திணைக்களத்தின் நிரந்தர பதவியணியில் உட்படுத்துவதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் ஆலோசனையின் படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திலிருந்து ஆலோசனையை பெற்று முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஆரம்ப மட்டத்தில் அடங்கும் அலுவலக உதவியாளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை காணப்படாத போதிலும், கடமையில் உள்ள உத்தியோகத்தர்கள் 03 பேர் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | 2020.08.09 திகதியில் வெளியிடப்பட்ட 2187/27 இலக்கம் கொண்ட வர்த்தமானியின் மூலம் அமைச்சு விடயப்பரப்பு மாற்றமடைந்த காரணத்தினால் அப்போது காணப்பட்ட பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் | முறையான அங்கீகாரத்தின் மீது பதவியணிக்கு இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அமைச்சு, நிதியமைச்சின் கீழ் வரும் போது அந்த அமைச்சுக்கு இணைந்து சேவையாற்றிய அலுவலக உதவியாளர்கள் (திணைக்களம் சார்) ஊழியர்கள் மூவர் இந்த திணைக்களத்தின் காணப்பட்ட அலுவலக உதவியாளர் சேவையின் தேவைப்பாடு மீது நிதியமைச்சுச் செயலாளரினால் இந்த திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டிருந்தன. தற்போது இந்தத் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த அலுவலக உதவியாளர் சேவையில் 76 பதவிகள் உட்பட இந்த அலுவல உதவியாளர் (திணைக்களம் சார்) ஊழியர் 03 பேரும் இணைக்கப்பட்டுள்ளனர் என கருணையுடன் அறிவிக்கின்றேன்.